ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1966/25 - 2016 මැයි මස 12 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.05.12

1966/25 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக் கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணம், காலி மாவட்டம், அக்மீமன பிரதேச செயலாளர் பிரிவில், 112 ஏ, வலஹந்தூவ கிராம அலுவலர் பிரிவில் வலஹந்தூவ கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2015.12.31 ஆந் திகதிய பி.පී.ගා : 4137 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 1 எனக் காட்டப்பட்ட 2.0234 ஹெக்டயார் முழு விஸ்தீரணம் கொண்ட கீழ் விபரிக்கப் பட்ட காணித்துண்டு:

**1. துண்டு இல. 1**

காணியின் பெயர்: வலஹந்தூவ வத்த ; விபரம்: விளையாட்டு மைதானமும் பற்றைக் காடும்; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: தலைவர், காணிச் சீர்திருத்த ஆணைக்குழு, கொழும்பு 07; விஸ்தீரணம்: 2.0234 ஹெக்டயார்.

மேற்குறித்த காணித்துண்டிற்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு, அக்மீமன பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப் படுத்தப்படல் வேண்டும்.

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

புஷ்பிக்கா துஷாரி ஜாகொட,
பிரதேச செயலாளர்,
அக்மீமன.

பிரதேச செயலகம்,
அக்மீமன,
2016, மே 06.

5 - 864

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.